www.Padasalai.Net www.TrbTnpsc.com

V10T

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

-----

வகுப்பு 10

தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

பகுதி -I

**1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** **15×1=15**

1) ‘மெத்த வணிகலன்’ என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது -----
   அ) வணிகக் கப்பலகளும் ஐம்பெரும் காப்பியங்களும்
   ஆ) பெருவணிகமும் பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2) செய்தி 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
   செய்தி 2 : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாயிரம் என்பது எனக்குப் பெருமையே
   செய்தி 3 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்
   அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
   இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

3) வாய்மையே மழைநீராகி -இத்தொடரில் வெளிப்படும் அணி -----
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

4) ‘சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி’ என்னும் அடியில் பாக்கம் என்பது -----
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5) கலைஞரின் கதை, வசனங்களில் பகுத்தறிவு பேசாத படம் -----
   அ) பராசக்தி ஆ) பூம்புகார் இ) ராஜகுமாரி ஈ) மலைக்கள்ளன்

6) ‘பிரிந்தன புள்ளின் காளில்
   பெரிதழுது இரங்கித் தேம்ப’ -பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க
   அ) கிளை, துளை ஆ) நிலம், வாட இ) காடு, வாட ஈ) காடு, நிலம்

7) மருதத்திணையின் சிறுபொழுது -----
   அ) வைகறை ஆ) மாலை இ) யாமம் ஈ) ஏற்பாடு

8) குலசேகர ஆழ்வார் ‘வித்துவக் கோட்டம்மா’ என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார் பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே -----
   அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி
   ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
   இ) பால் வழுவமைதி திணை வழுவமைதி
   ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

9) ‘செல்வத்துப் பயனே ஈதல்
   துய்ப்பேம் எனினே தப்புந பலவே’’ -என்று மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கூறும் அறம் -----
   அ) அரசியல் அறம் ஆ) கொடை அறம் இ) வாய்மை அறம் ஈ) போர் அறம்

10) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இல்க்கியமாக ம.பொ.சி. கருதியது -----
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

11) பெரிய மீசை சிரித்தார் ----- வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத் தொகை
   இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக

‘விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம்
புதியதோர் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைத்த மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய் தேற்றி’

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

12) இப்பாடல் இடம் பெறும் நூல் -----
அ) திருவிளையாடற்புராணம் ஆ) பெரியபுராணம்
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

13) சீர் மோனையை எடுத்து எழுதுக
அ) கதலி - கவரிவால் ஆ) விதிமுறை - விதானம்
இ) கதலிகை - கதிர்மணி ஈ) கவரிவால் - காடன்

14) 'கவரி' என்ற சொல்லின் பொருள் -----
அ) மாலை ஆ) தலை இ) சாமரை ஈ) சினம்

15) இப்பாடலை இயற்றியவர் யார்?
அ) சேக்கிழார் ஆ) கம்பர் இ) இளங்கோவடிகள் ஈ) பரஞ்சோதி முனிவர்

## பகுதி -II (மதிப்பெண்கள் – 18)

### பிரிவு-1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **4×2=8**
**வினா எண்: 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

17) விடைகளுக்கு ஏற்ற வினாக்கள் அமைக்க:
அ) அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன
ஆ) காற்று மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

18) வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

19) 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' -இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

20) சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் -இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

21) 'பொருள்' என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு-2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5×2=10**

22) **தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக:**
மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும்.

23) 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப்பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

24) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
(அ) விடு - வீடு (ஆ) கொள் - கோள்

25) **பகுபத உறுப்பிலக்கணம் தருக:** பதிந்து

26) குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

27) **அகராதியில் காண்க:** (அ) செவ்வை (ஆ) தூவல்

28) **கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக:**
அ) உழவர்கள் மாலையில் உழுதனர்
ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

## பகுதி -III (மதிப்பெண்கள் – 18)

### பிரிவு-1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

29) சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

30) உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

கலைஞரின் கதை, வசனத்தில், எம்.ஜி.ஆரின். நடிப்பில், 'மருதநாட்டு இளவரசி', 'மந்திரிகுமாரி', 'நாம்', 'மலைக்கள்ளன்' முதலான படங்கள் தொடர்ந்து வெளிவந்தன. கலைஞரின் வசனங்கள் 'சொல் புதிது சுவை புதிது' என்று கேட்போர் வியக்கும் வண்ணம் அமைந்தன. எம்.ஜி.ஆர். உச்ச நட்சத்திரம் ஆனார், கலைஞரும் உச்சாணிக் கொம்புக்கு உயர்ந்தார். இருவருக்குமான கலைஉறவு நீண்டகாலம் தொடர்ந்தது.

அ) கலைஞரின் வசனங்கள் எவ்வண்ணம் அமைந்தன?

ஆ) யார் யாருக்குமான கலைஉறவு நீண்டகாலம் தொடர்ந்தது?

இ) கலைஞரின் கதை, வசனத்தில், எம்.ஜி.ஆரின் நடிப்பில் வெளிவந்த படங்கள் யாவை?

## பிரிவு-2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

**வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்க.**

32) 'தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

33) 'சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது'' - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

34) **அடிபிறழாமல் எழுதுக**

அ) விருந்தினனாக ........ எனத் தொடங்கும் 'காசிக்காண்டம்'. பாடல்

**(அல்லது)**

ஆ) தூசும் துகிரும் .......... எனத் தொடங்கும் 'சிலப்பதிகாரம்' பாடல்

## பிரிவு-3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

35) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36) தன்மையணியைச் சான்றுடன் விளக்குக.

37) 'கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்'
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக

## பகுதி -IV (மதிப்பெண்கள் – 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38) அ) பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

**(அல்லது)**

ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

39) அ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும் புயலில், சாய்ந்த மரங்களை வெட்டி, பழுதுபட்ட சாலையைச் சீரமைத்துத் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக**



www.Padasalai.Net

41) விருதுநகர் மாவட்டம் கதவு எண் 25, வள்ளலார் நகர், திருச்சுழி என்ற முகவரியில் வசிக்கும் சுதா, குளோபல் நிறுவனம் ஒன்றில் எழுத்தர் பணிவேண்டி தன்விவரப்பட்டியலை நிரப்புக.

42) அ) மாணவர்களாகிய நீங்கள் பள்ளியிலும் வீட்டிலும் நடந்துகொள்ளும் செயல்களை எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

## பகுதி -V (மதிப்பெண்கள் – 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3×8=24**

43) அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக் கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

44) அ) 'அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) 'அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்' என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

45) அ) **'சான்றோர் வளர்த்த தமிழ்'** என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் **'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்'** என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

- - - - - - - -

www.Padasalai.Net